[2015 ஆகஸ்ட் 31

172—

புதிய மின்மாற்றி

***52438—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சுக்கானேந்தல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆம். காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சுக்கானேந்தல் கிராமத்திற்கு அரண்மனைவயல் S.S. No. *2x100* KVA/*11* KV *மின்மாற்றியின்மூலம் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மின்பளுவைக் கருத்தில்கொண்டு, சுக்கானேந்தல் கிராமத்தில் மேலும் ஒரு புதிய 100* KVA *திறன்கொண்ட மின்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் இன்னும் இரண்டு வார காலத்திற்குள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணோரம் புகழை நிலைநிறுத்தி, கண்ணோரம் மக்களைக் காக்கின்ற தாயே! பெண்ணாற்றல் போற்றும் வெகுமதி அம்மா. மின்னாற்றல் மிகுதியில் தமிழ்நாடு அம்மா! பகுப்பாய்வு நடத்திய பத்திரிகைகள் எல்லாம் தொகுப்பாய்வாய் தந்தன, 2016–லும் அம்மாதான் முதல்வர் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அலை வடிவில் செல்வது மின்சாரம், இலை வடிவில்*

2015 ஆகஸ்ட் 31]

வெல்வது மின்சார சாதனம், அலை வடிவில் கயவர் செல்வது திகார் சிறை, கலை வடிவில் முதல்வராக அம்மா அமர்வார் ஆறாம் முறை. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் ஃபாரடே, மின்சாரத்தால் கயவர் ஆட்சி ஒழிந்தது yesterday, *மின்சாரம் அம்மா காலடியில் கட்டுண்டு கிடப்பது* today. *(மேசையைத் தட்டும் ஒலி) அருள்காக்கும் தாயே, எம் அம்மாவே, நீவிர் வாழ்க, இருள் நீக்கும் சுடரே, எங்கள் இதய தெய்வமே, நீவிர் வாழ்க எனக் கூறி வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுக்கானேந்தல் கிராமத்தில் ஒரு வார காலத்திற்குள்ளாக மின்மாற்றி அமைத்துத் தரப்படும் என்ற செய்தியைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை ஒன்றியம், இலங்கை தர்ம முனீஸ்வரர் ஆலயம், பொன்னி கார்மாகுடி, மினிட்டான்குடி, தென்னீர்வயல், புதுக்கண்மாய், திடக்கோட்டை ஆகிய பகுதிகளிலும், கண்ணங்குடி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, கோஞ்சனி, நாட்டார்வழி, கங்கனி, கீரணி ஆகிய பகுதிகளிலும், சாக்கோட்டை ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, காட்டுக் குடியிருப்பு, பெரியகோட்டை ஊராட்சி, சிவலான்குடி, சிறுகப்பட்டி ஊராட்சி, ஆயினிப்பட்டி ஆகிய பகுதிகளிலும், கல்லல் ஒன்றியம், கோவிலூர் பெரியகோவில் அருகிலும், மின்மாற்றி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் தொகுதியில் அனைத்து இடங்களிலும் மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் மின் பளுவை ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில் இப்பொழுது இருக்கின்ற மின் மாற்றிகளின் திறனுக்குமேல் மின் பளு அதிகமாக இருக்குமேயானால் உடனடியாக மின் மாற்றிகளை மாற்றி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி*

அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

173—

மேம்பாலம்

***53384 திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், கலிங்கப்பட்டி முதல் கரிசல்குளம் வரையிலுள்ள சாலையில் நிசேப நதியின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், கலிங்கப்பட்டி முதல் கரிசல்குளம் வரையிலுள்ள சாலையில் நிசேப நதியின் குறுக்கே நபார்டு வங்கியின் நிதியுதவியோடு ரூ.342 இலட்சம் செலவில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 2—6—2012 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சத்தியம் நீயே தருமத் தாயே, குழந்தை வடிவே